முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.448/2019

2024 வது ஆண்டு நவம்பர் மாதம் 07–ம் நாள் வா.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ஆயிஷா பானு (கிராம நிர்வாக அலுவலர், தச்சநல்லூர் | வட்டம் | |
| க.பெ / த.பெ | திரு.சேக் அப்துல் காதர் | கிராமம் | |
| வயது | 46 | மதம் | |

07.11.2024 முதல் விசாரணை

நான் தச்சநல்லூர், கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையில் கண்டபடி காலம்சென்ற ஏ.எஸ்.முருகன் என்பவரின் வாரிசுகள் யார் யார் என்று விசாரணை செய்தேன். மேற்படி ஏ.எஸ்.முருகன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் அவரது முதல் மனைவி பெயர் தில்லை. மேற்படி தில்லை நலமாக தான் உள்ளார். தில்லைக்கும் காலம் சென்ற ஏ.எஸ்.முருகனுக்கு சத்தியவாணி என்ற ஒரே மகள். ஏ.எஸ்.முருகன் என்பவர் அவரது முதல் மனைவி உயிருடன் இருக்கும் போதே கோமதி என்பவரை திருமணம் செய்து கொண்டார். ஏ.எஸ்.முருகனுக்கும் கோமதிக்கும் 1) குமரன் 2) பாலசுப்பிரமணியன் என்ற 2 பிள்ளைகள். ஏ.எஸ்.முருகனின் பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள்.